
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1249

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

68

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘மதுரை மீனாட்சி’ அதிகாரத்துக்கு எதிராக, உரத்துப் பேசிய உண்மைகள்!

1993-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக்கதை வசனத்தில் ‘பூமாலை புரொடக்‌ஷன்’ சார்பில், குணாநிதி தயாரித்து, பி.அமிர்தம் இயக்கி ஒளிப்பதிவும் செய்த படம், ‘மதுரை மீனாட்சி’. மூலக்கதை பி.அரிராஜன். இசை தேவா, பாடல்கள் கலைஞர் மற்றும் வைரமுத்து.

இந்தத் திரைப்படத்தில், செல்வா, ரஞ்சிதா, சுஜாதா, விஜயகுமார், வாகை சந்திரசேகர், நாசர், கேப்டன் ராஜு, சபீதா ஆனந்த், எஸ்.எஸ்.சந்திரன், பிரதீப் சக்தி ஆகியோர் முதன்மை கதாபாத்திங்களில் நடித்துள்ளனர். படத்தின் பெயரைப் பார்த்தவுடன், பக்திப் படம் என்கிற சந்தேகம் தோன்றுவது இயற்கை. இதுகுறித்து, படத்தின் தொடக்கத்தில் திரையில் தோன்றி கலைஞரே தெளிவுபடுத்துவார்.

‘கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு’ ஆகிய மூன்றும் ஆட்சியாளருக்கும் அதிகார வர்க்கத்திற்கும் எத்தனை அவசியம் என்பதை விளக்குவதே, படத்தின் நோக்கமாகும்.

### படத்தின் கதை :

மரகதம் (சுஜாதா) போக்குவரத்துக் காவலரின் உடையினை அலங்கோலமாக அணிந்துகொண்டு சாலையின் நடுவில் நிற்கிறாள். அணிவகுத்து வரும் மந்திரியின் காரை மறித்து, மந்திரியைக் கேலி செய்து பேசுகிறாள். காவல் துறையினர் வந்து, ‘போ பைத்தியமே’ என்று அவளைத் தள்ளிவிடுகின்றனர். அவள் கீழே விழுகிறாள். பின்னோக்குக் காட்சியின் (FLASH BACK) வழியாக, நமக்கு கதை சொல்லப்படுகிறது.


மதுரை (செல்வா) போக்குவரத்துக் காவலராக இருக்கிறான். அவனது தாய் மரகதம் (சுஜாதா) சாலையோரத்தில் காய்கறி விற்கிறார். ஒரு நாள் போக்குவரத்தை மதுரை சரி செய்து கொண்டிருக்கும்போது, சாலை விதிகளை மதிக்காமல் மீனாட்சி (ரஞ்சிதா) காரில் வேகமாக வருகிறாள். அவளது காரை நிறுத்தி, அபராதம் விதிக்க முற்படுகிறான். அவள் உள்துறை அமைச்சர் உலகநாதனின் (கேப்டன் ராஜு) மகள் என்பது அவனுக்குத் தெரியாது.

அவன்மீது கோபம் கொள்ளும் மீனாட்சி, மதுரையைப் பழிதீர்க்கும் விதமாகத் தனது தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவனைத் தனது வீட்டு வாயிலில் சென்ட்ரியாக நிறுத்துவதுடன் அவனைப் பல்வேறு விதமாக இழிவு செய்கிறாள்.

காலப்போக்கில் இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. ஆனால், மீனாட்சி அமைச்சரின் மகள், பணக்காரி என்ற அந்தஸ்தைக் காரணம் காட்டி, மரகதம் தனது மகனிடம் ‘இந்தக் காதல் வேண்டாம்’ எனத் தடுக்கிறாள். மதுரையும் புரிந்துகொண்டு ஒதுங்குகிறான். ஆனால் மீனாட்சியோ, தனது தந்தையைப் பற்றி புரிந்துகொள்ளாமல் மதுரையை வற்புறுத்தி காதலிக்கிறாள்.

அதே சமயம், முதலமைச்சர் விரும்பும் தோட்டத்தையும் பங்களாவையும் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு அமைச்சர் உலகநாதனிடம் ஒப்படைக்கப்படுகிறது. அதனால், தனது பரிவாரங்களுடன் அத்தோட்டத்திற்குச் செல்லும் உலகநாதன் இடத்தைப் பார்வையிட்டு, இடத்தின் உரிமையாளரிடம், ‘முதலமைச்சருக்கு இவ்விடத்தை விற்க வேண்டும்’ என்று மிரட்டுகிறான்.

அத்தோட்டமும் அதனை ஒட்டிய பங்களாவும் குமாரசாமிக்கும் (விஜயகுமார்) அவரது தம்பி குணசேகருக்கும் (நாசர்) சொந்தமானதாக இருக்கிறது. அவர்கள் அந்த இடத்தில் பார்வையற்ற மாணவர்களைத் தங்க வைத்துப் பராமரிப்பதுடன் அவர்களுக்குக் கல்வியும் அளித்து வருகின்றனர். அதனால் தங்களது இடத்தை விற்க முடியாது. விருப்பமும் இல்லை என்று தெரிவித்துவிடுகின்றனர்.





படங்கள் உதவி : ஞானம்

இதனால் ஆத்திரப்படும் அமைச்சர் உலகநாதன், அந்த இடத்தைக் கைப்பற்றும் பொறுப்பை இன்ஸ்பெக்டர் ருத்ராவிடம் (பிரதீப் சக்தி) ஒப்படைக்கிறான். ருத்ரா பல்வேறு வகையில், குமாரசாமி குடும்பத்தைத் தொந்தரவு செய்கிறான். அதனை குணசேகரன் முறியடிக்கிறான்.

ஒரு கட்டத்தில், பத்திரத்தில் கையெழுத்திட மறுக்கும் குமாரசாமியை அமைச்சரின் ஆட்கள் கழுத்தை நெரித்துக் கொலை செய்து விடுகின்றனர். இதற்குப் பழிவாங்கத் துடிக்கும் குணசேகரனை அவனது மனைவி கோமதி (சபீதா ஆனந்த்) தடுக்கிறாள். “நீங்கள் இல்லாவிட்டால், பார்வையற்ற பிள்ளைகள் அநாதைகளாகிவிடுவர்” என்று அமைதிப்படுத்துகிறாள்.

### பொய் வழக்குகள்

இடத்தைக் கைப்பற்ற முடியாமல் அமைச்சர் தவிக்கிறார். முதலமைச்சரிடம் இருந்து அழுத்தம் அதிகமாகிறது. இந்த நேரத்தில் தன் மகள் போலீஸ் கான்ஸ்டபிள் மதுரையைக் காதலிப்பது தெரியவருகிறது. அமைச்சர் உலகநாதனும் இன்ஸ்பெக்டர் ருத்ராவும் சேர்ந்து சதி செய்து, குணசேகரன் மீது கொலைப்பழி சுமத்திக் கைதுசெய்து, போலீஸ் லாக்கப்பில் அடைக்கின்றனர். தன் கணவனைத் தேடி காவல் நிலையம் வரும் கோமதியை வல்லுறவு செய்து கொலை செய்கிறான், ருத்ரா. இதனைத் தடுக்க வரும் கான்ஸ்டபிள் மதுரையை லாக்கப்பில் அடைத்து, கோமதியை வல்லுறவு செய்து கொலை செய்ததாகப் பொய் வழக்கில் நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்துகின்றனர். மதுரைக்காக வாதாடுவதாக வரும் வழக்கறிஞர் ஸ்டீபன் (விஜய் கிருஷ்ணராஜ்), அமைச்சர் உலகநாதன் ஏற்பாட்டில், மதுரைக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்.

இதுநாள் வரை அமைச்சரால் அடைத்து வைக்கப்பட்டிருந்த குணசேகரன் தப்பித்து வந்து, தன் மனைவியைக் கொன்ற சப் இன்ஸ்பெக்டர் ருத்ராவைத் தாக்குகிறான். அமைச்சரின் வீட்டில் நடைபெறும் இந்த சண்டையில் ருத்ரா தனது துப்பாக்கியால் குணசேகரனைச் சுடுகிறான். குணசேகரனது வயிற்றில் குண்டு பாய்ந்து ரத்தம் கொட்டுகிறது.

அதே நேரம், மரகதம் டி.ஜி.பி.யை அங்கு அழைத்து வருகிறாள். அங்கு வரும் டி.ஜி.பி. (வாகை சந்திரசேகர்), ருத்ராவைச் சுட்டுக் கொல்கிறார். இதை எல்லாம் நேரில் பார்க்கும் மீனாட்சி, இத்தனை கொடுமைகளுக்கும் தன் தந்தைதான் காரணம் என்பதறிந்து, மதுரையைத் தூக்கிலிடும் அதே நேரம் தானும் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு சாகப்போவதாகச் சொல்லிச் செல்கிறாள்.

உயிருக்கு ஆபத்தான நிலையில், நீதிபதியிடம் மரண வாக்குமூலம் கொடுத்துவிட்டு குணசேகரன் இறந்துபோகிறான். உடனே, நீதிபதியும் டி.ஜி.பி.யும் சிறைச்சாலைக்குப் போய் மதுரையைத் தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்றுகின்றனர். அடுத்து, மீனாட்சியைக் காப்பாற்ற வேகமாகப் போகின்றனர்.

ஆனால், அதற்குள் அவசரப்பட்டு தன்னைத்தானே சுட்டுக்கொண்டு மீனாட்சி சாகிறாள். அங்கு வரும் அமைச்சர் உலகநாதன் கதறி அழுகிறார். டி.ஜி.பி.யுடன் அங்கு வரும் மதுரை, தன் காதலி மீனாட்சி இறந்து கிடப்பதைக் கண்டு கதறுகிறான். தன் காதலி மீனாட்சியின் அருகில் கிடக்கும் துப்பாக்கியை எடுத்துப் பார்க்கிறான். அதில் ஒரு தோட்டா மீதம் இருக்கிறது. உடனே அதே துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக்கொண்டு சாகிறான். இதைப் பார்க்கும் மதுரையின் தாய் மரகதத்திற்கு அதிர்ச்சியில் மனநலம் பாதிக்கிறது.

ஃபிளாஷ்பேக் நிறைவடைகிறது.

மீண்டும் படத்தின் தொடக்கக்காட்சி திரையில் விரிகிறது. மரகதம் போக்குவரத்துக் காவலர் சீருடையுடன் சாலையில் நடந்து போகிறாள். பின்னணியில் கலைஞரின் குரல் ஒலிக்கிறது..

தாய்ப்பறவையோ,
என் மகனைத் தாங்கியது இந்த வயிறு.
ஆனால், அவன் பிரிவைத் தாங்க
என் இதயத்திற்கு வலு இல்லையே என
ஏங்கித் தவிக்கிறது...

என்று பேசுவதுடன் படம் நிறைவடைகிறது.

பார்வையாளர்கள் அந்தக் காலகட்டத்துடன் கதையைப் பொருத்திப்பார்த்தால், கலைஞர் அன்றைய ஆட்சிக்கு எதிராகத் திரைக்கதையில் நிகழ்த்திய கலகம் புரியும்.

**...காட்சி விரியும்**

> “பார்வையாளர்கள் அந்தக் காலகட்டத்துடன் கதையைப் பொருத்திப்பார்த்தால், கலைஞர் அன்றைய ஆட்சிக்கு எதிராக திரைக்கதையில் நிகழ்த்திய கலகம் புரியும்.”

## ஜனநாயகப் படுகொலையைக் கண்டிப்போம்!

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகச் செய்து, தன் கட்சியில் இணைத்துவரும் த.வெ.க.வின் ஜனநாயகப் படுகொலையை, கம்யூனிஸ்ட்டுகள் கண்டிக்க முன் வர வேண்டுமென்று பதிவிட்டுள்ளார், எழுத்தாளர் கவிதாபாரதி.

அவரது பதிவில், “மொத்த இந்தியாவுக்கும் அயோத்தி போல, தமிழ்நாட்டை வசப்படுத்துவதற்கு பா.ஜ.க. திட்டமிட்டிருக்கும் அரசியல் துறைமுகம் திருப்பரங்குன்றம். அதனால்தான் பா.ஜ.க. குடியுரிமை பெற்ற நிர்மல்குமார், த.வெ.க.வில் சேர்ந்து திருப்பரங்குன்றத்தில் நிறுத்தப்பட்டார். திருப்பரங்குன்றத்தின் கள அரசியல் வெளிப்படையானது. இஸ்லாமிய எதிர்ப்பு இந்து மதவாத சக்திகள், மதவாத எதிர்ப்பு சக்திகள்.

அண்மையில் ஒரு புகைப்படத்தைப் பார்த்தேன். திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் நிர்மல்குமார் சட்டமன்ற அலுவலகத்தை, மார்க்சிஸ்ட் கட்சியின் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சு.வெங்கடேசன் திறந்துவைக்கிறார்.

நிர்மல்குமார் யார்..? அவரது அலுவலகம் எந்தத் தரப்பு அரசியலுக்குப் பயன்படும் என்பதெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் அறியாததல்ல. தமிழ்நாடு சட்டசபையில், மரபுக்கு மாறாக இரண்டு முறை தேசியகீதம் பாடப்பட்டது, விமர்சனத்திற்குள்ளானது, இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன என்று கேட்டதற்கு தோழர் சு.வெங்கடேசன் சொல்கிறார், “தேசியகீதத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் பாடலாம் தவறில்லை” என்கிறார். ஒருவேளை அந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது, நிர்மல்குமார் அலுவலகத்தில் அவர் இருந்ததும் காரணமாக இருக்கலாம்.

“கடந்த ஆட்சியில் அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டிருந்தன. இந்த ஆட்சி நேர்மையான அதிகாரிகளுக்குப் பொற்காலம்” - இதைச் சொன்னது, த.வெ.க.வில் சேர்ந்த தோழர்.சி.மகேந்திரன் அல்ல, வெளியிலிருந்து ஆதரிக்கும் தோழர் சு.வெங்கடேசன் தான்... கடந்த ஆட்சியில் அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டிருப்பதை, அப்போதே சொல்லமுடியாமல், இந்த ஆட்சி வரை தோழர்.வெங்கடேசன் வாயைக்கட்டி வைத்திருந்தது ஏனென்று தெரியவில்லை.

வேறு கட்டடத்தில் பெயர்த்தெடுத்த தூண்களை ஏற்பாடு செய்துவிட்டபடியால், இனி இந்த ஆட்சியைத் தாங்கிப்பிடிக்க வேண்டிய அவசியம் கம்யூனிஸ்ட்டுகளுக்கு இல்லை. ‘போதும் போங்க’ என்று சொல்வதற்கு முன், தாமாக முன்வந்து ஆதரவு நிலைப்பாட்டைத் துறந்து முழுமூச்சாக மக்களுக்கான போராட்டங்களில் இறங்க வேண்டும் என்பதே கம்யூனிஸ்ட்டுகளை நம்புபவர்களின் எதிர்பார்ப்பாகும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.குமார்

### தலைவர் சுவைத்த பிரியாணி!

1993-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களின் 41-வது பிறந்தநாளை, இராயபுரம் பகுதி, அன்றைய 9-வது வட்டம் இளைஞர் அணி சார்பில், மிகச் சிறப்பாகக் கொண்டாடினோம். பொதுமக்கள் 500 பேருக்கு மட்டன் பிரியாணி சமைத்து வழங்கினோம். அந்த பிரியாணியை, அன்பகத்துக்கு எடுத்து வந்து, தலைவரிடம் சுவை பார்க்கவைத்தோம். தலைவர் சுவை பார்த்ததும், நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடன், அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், இன்றைய தென்சென்னை மாவட்டச் செயலாளர் அண்ணன் மா.சுப்பிரமணியன் இருந்தார்.

**- எஸ்.குமார், இராயபுரம்,**
**மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர்,**
**சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள்: கரு

### தூத்துக்குடி சதி வழக்கு!

1953-ஆம் ஆண்டு, கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில், டால்மியாபுரத்தில் தண்டவாளத்தில் தலைவைத்து, கலைஞர் இரயிலை மறித்ததுபோலவே தூத்துக்குடியிலும் கழகத்தினர் மிகப்பெரிய அளவில் இரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். கே.வி.கே. சாமி அவர்கள், முதல்நாள் இரவே முன்னெச்சரிக்கையாகக் கைதுசெய்யப்பட்ட நிலையில், தூத்துக்குடி செயலாளர் நடராஜன் தலைமையிலான குழுவினர், இரயில் மறியல் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது, போலீஸாரின் தடியடி, துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற கிளர்ச்சியை, ‘தூத்துக்குடி சதி வழக்கு’ என வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900